வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු





Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 25.09.2025 வியாழக்கிழமை இதழ் : 268 பக்கங்கள் : 08

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளருடன் ஜனாதிபதி அநுரகுமார முக்கிய சந்திப்பு

நியூயோர்க், செப். 25

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரேர்க்

07



## தென்னாபிரிக்க ஜனாதிபதியுடன் அநுர சந்திப்பு

நியூயோர்க், செப். 25

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபை அமர்வில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவை சந்தித்துள்ளார்.

நேற்று பிற்பகல், நியூ

07

## மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் மேலதிக நீதிவான் பதவி நீக்கம்

யாழ்ப்பாணம், செப். 24

மல்லாகம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் நேற்று பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் என். பார்த்தீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் சுபறாஜினி ஜெகநாதனுக்கெதிராக நீதிச்சேவை ஆணைக் குழுவில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப் பட்ட முறைப்பாடு தொர்பான விசாரணை சமீப காலமாக நடைபெற்று வந்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 23.09.2025 அன்று நீதிச் சேவை ஆணைக்குழுவில் இடம்பெற்ற

07

## தயாசிறியின் உரையால் நேற்று சபையில் பரபரப்பு

கொழும்பு, செப். 25

கடந்த காலங்களை விட, இந்த அரசாங்கம் நீதித்துறையில் அதிக தலையீடுகளை மேற்கொள்வதாக, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றில் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்படி, தமக்கு ஏற்றவாறு நீதிபதி ஆயங்களை நியமித்து வழக்குகளை விசாரிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசமைப்புக்கமைய, நீதிபதி அல்லது நீதியரசர் ஒருவரை வேறெந்த வேதனம் பெறும்

07

# அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை பேண அரசு எதிர்பார்ப்பு

**ட்ரம்பின் பிரதிநிதியுடன் அநுர முக்கிய சந்திப்பு**

நியூயோர்க், செப்ரெம்பர் 25

**வர்த்தக, வாணிப, சுற்றுலா மற்றும் முதலீடு உள்ளிட்ட முக்கிய துறைகள் தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.**

ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தையொட்டியதாக இந்த கலந்துரையாடல் நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த முக்கிய துறைகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான விசேட பிரதிநிதிக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் ஏனைய உயரதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த சந்திப்பில் வர்த்தக, வாணிப, சுற்றுலா மற்றும் முதலீடு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் முக்கியமான துறைகள் தொடர்பில் கவனம்

07

## மார்பக புற்றுநோய் தீவிரம்

கொழும்பு, செப். 25

இலங்கையில் தினமும் சுமார் 15 புதிய மார்பகப் புற்றுநோய் சம்பவங்கள் பதிவாகின்றன. அதே நேரத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் மூன்று பெண்கள் இந்த நோயால் உயிரிழப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

07

## ட்ரம்பை சந்தித்த அநுர

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் இடையிலான சந்திப்பு அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின்

07

## சிறுவர் பாதுகாப்பு ஆபத்தில்!

கொழும்பு, செப். 25

2025 ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற

07

## காணாமலாக்கப்படல் குறித்த குழுவின் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு உறவுகள்

கொழும்பு, செப். 25

ஜெனிவாவில் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டத்தில் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி, எதிர்வரும் ஒக்ரோபர்

07

## நிறைவேற்று அதிகார முறைமை எப்போது இல்லாதொழிக்கப்படும்?

கொழும்பு, செப். 25

“திசைகாட்டியின் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம், அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டுவந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மையை இல்லாதொழிப்பது எப்போது?” - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்

07

## மாணவர்களுக்கு ரூ. 5,000!

கொழும்பு, செப். 25

உயர்தரப் பரீட்சைகளில் தோற்றிய மாணவர்களுக்கு பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட 5,000 ரூபாய் வழங்க வேண்டும் என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்மொழிவு ஒன்றை பாராளுமன்றத் தில் செய்துள்ளார்.

07

# மன்னார் காற்றாலை திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, செப். 25

யதார்த்தத்தைக் கருத்தில் கொண்டு, மன்னாரில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இரண்டு காற்றாலை மின்சார உற்பத்தித் திட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு ஆவணம், வட்சப் செயலி ஊடாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் பிரதிகளைத் தாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ ஆவணம் கிடைத்த பின்னர் அதன்

07

## மன்னார் காற்றாலை திட்டம் உடன் நிறுத்தப்படவேண்டும்

**போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தியாகத்துக்கு தயங்கமாட்டார்களென செல்வம் எம்.பி எச்சரிக்கை**

கொழும்பு, செப். 25

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தொடர்பில் மக்களின் கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் அந்த திட்டம் தொடர்பான செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி அறிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் திட்டம் நிறுத்தப்படா விட்டால் போராட்டத்தில்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் இந்திய உதவியில் 4 மாடி கட்டடம்

## புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில்

கொழும்பு, செப். 25

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண் மற்றும் பெண் நோயாளர்களுக்காக இந்திய உதவியில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்கு மாடி விடுதிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளர்களுக்கான விடுதிக்கான நிரந்தர கட்டடம் இல்லாமை தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளர்களுக்கான தற்காலிக விடுதி இயங்கி வருகின்றது. இந்நிலையில் அங்கே இந்தியாவின் உதவித் திட்டத்தின் கீழ் நான்கு மாடி விடுதி கட்டடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

அந்தத் திட்டத்தை செயற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான இருதரப்பு உடன்படிக்கை கைச்சாத்தாகவுள்ளது.

மன்னாரில் அவசர சிகிச்சைப் பிரிவை இந்திய உதவித் திட்டத்தில் நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அடுத்ததாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்த பின்னர் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# கர்ப்பவதி தாய்மார்களுக்கான மருத்துவ முகாம் நாவாந்துறையில்



யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 40 கர்ப்பவதித் தாய்மார்களுக்கான மருத்துவ முகாம் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் அத்தியாவசியப் பொதிகள் விநியோகம் என்பன கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், நாவாந்துறை, பொம்மைவெளியில் அமைந்துள்ள குடும்ப மருத்துவமனை சுகாதார நிலையத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் 512 ஆவது காலாட்படை படையணியின் மேற்பார்வையின் கீழ், 51 ஆவது காலாட்படை பிரிவு மற்றும் யாழ்ப்பாணம் படைத் தலைமையகத்தின் வழிகாட்டுதலின் கீழ், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாண சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து, கஜபா படைப்பிரிவின் 14 ஆவது பட்டாலியன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட படைகளின் யாழ். தளபதி மேஜர் ஜெனரல் கே.ஏ.என். ரசிக குமாரவை, 51 ஆவது காலாட்படை பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.பி.என்.ஏ. முத்துமால, 512 ஆவது காலாட்படை படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் எல்.ஏ.ஆர். குணரத்ன மற்றும் கஜபா படைப்பிரிவின் 14 ஆவது பட்டாலியன் கட்டளை அதிகாரி மேஜர் கே.ஜி.டி. ஜெயவர்தன ஆகியோர் வரவேற்றனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் மகப்பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ ஆலோசகர் டாக்டர் என். சரவணபவவால் மருத்துவ கிளினிக்குடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் அத்தியாவசியப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. மருத்துவமனை வளாகத்தில் அனைத்து பயனாளிகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# இந்திய மீனவர்கள் 7 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், செப். 25

கடந்த மாதம் 13ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 07 இராமேஸ்வரம் மீனவர்களையும் நிபந்தனையுடன் விடுதலை செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13 ஆம் திகதி நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட 07 தமிழக மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போதே அவர்கள் அனைவரும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

6 வருடங்கள் ஒத்திவைக்கப்பட 2 வருடச் சிறைத் தண்டனை என்ற நிபந்தனையுடன் 7 மீனவர்களையும் விடுவித்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

அத்துடன் ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி நெடுந்தீவுக் கடலில் மீன்பிடி உபகரணங்கள் ஏதும் இல்லாமல் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 4 மீனவர்களும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டனர். (அ-05)

# சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 25

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குருபூசை விழாவும் அத்துடன், நவராத்திரி விழாவும் கைதடி நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

விஷேட பூசை வழிபாட்டை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வு, இளம் சைவப் புலவர் க. கபிலைவாசன் "சக்தி வழிபாட்டின் மகிமை" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன. (ஐ)

# மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா



கொழும்பு, செப். 25

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

இதன் போது உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கிடையில் இரு தரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு அம்சங்கள் மற்றும் இலங்கையில் அரசியல் முன்னேற்றங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டன என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு - விஜயராமை உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த, தங்காலை கால்டன் இல்லத்தில் தற்போது வசித்து வருகிறார்.

மகிந்த கொழும்பிலிருந்து வெளியேற முன்னர் சீன தூதுவரை சந்தித்திருந்தார். இவ்வாறு முக்கிய இராஜதந்திரிகள் முன்னாள் ஜனாதிபதிகளை சந்தித்து வரும் நிலையில், இந்திய உயர்ஸ்தானிகரும் மகிந்தவை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சந்தேகநபருக்கு தடுப்பு காவல்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற நிலையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்றைய தினம் கோண்டாவில் பகுதியில் இரண்டு வாள் களும் ஒரு கைக்குண்டு என்பன மீட்கப்பட்டன.

இந்நிலையில், சந்தேகநபரை நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பெரும் குற்றத் தடுப்பு பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போது, சந்தேகநபரை இரண்டு நாட்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு பொலிஸார் அனுமதி கோரினர். இந்தக் கோரிக்கைக்கு நீதிமன்றமும் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ -05)

# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வருடாந்த பரிசோதனை நடைபெற்றது

கிளிநொச்சி, செப். 25

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நேற்றுக் காலை இடம்பெற்றது.

கிளிநொச்சி பிராந்தியத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டி சில்வா கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இதன்போது பொலிஸாரின் சீருடை, வாகனங்கள், அலுவலகங்கள் மற்றும் பெரும் குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தும் மோப்ப நாய்கள் என்பவற்றின் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொலிஸ் பரிசோதனையின் இறுதி பரிசோதனையாக இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (அ)

# மக்களுக்கு இடையூறின்றி விளம்பரப்படுத்த ஏற்பாடு

## வலி. மேற்கு பிரதேச சபை முன்மாதிரி

யாழ்ப்பாணம், செப். 25

வலிகாமம் மேற்குப் பகுதியில் 7 இடங்களில் விளம்பரங்களை காட்சிப்படுத்த வலி. மேற்கு பிரதேச சபையால் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், கோவில்களின் விஞ்ஞாபனங்கள் மற்றும் பொது அறிவித்தல்கள் என்பன மக்களது வீடுகளின் மதில் சுவர்கள், பாடசாலைகளின் மதில்கள், பல்வேறு நிறுவனங்களின் சுவர்களிலும் ஒட்டப்படு வதால் இவ்வாறு விளம்பரங் கள் ஒட்டப்படும் பகுதிகள் அழுக்காகின்றது மட்டுமல்லா மல் அது விசனத்துக்கும் உள் ளாகின்ற நிலைமைகள் ஏற்படு கின்றன.

மதில் சுவர்கள் இவ்வாறு அழுக்கடைவதை தடுக்கும் நோக்கில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையானது ஒரு முன்மாதிரியான நடவடிக்கையை எடுத்துள்ளது. அதாவது வலிகாமம் மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட 7 பொது இடங்களில் இவ்வாறான விளம்பரங்களை காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, சுழிபுரம் சந்தி, வழக்கம்பரை அம்மன் கோவில் அருகாமை, சித்தங் கேணி சந்தி, சங்கரத்தை சந்தி அருகாமை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகம் அருகில், அராலி ஐயனார் கோவில் அருகாமை போன்ற இடங்களில் விளம்பரங்களை காட்சிப்படுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் இந்த முன்மாதிரியான, பயனுள்ள செயற்பாட்டை மக்கள் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.09.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சுவிற்சர்லாந்து சந்திப்பு

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது. தேசிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக, பல கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் இணைக்கப்பட்டிருந்தனர். இதன்போது, சுவிற்சர்லாந்தில் காணப்படும் சமஷ்டி முறைமை தொடர்பில் வகுப்புகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னரும் இது போன்ற சந்திப்புகள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறான சந்திப்புகள் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும்?

சுவிஸ் தூதரகம் ஏன் இவ்வாறான சந்திப்பு ஒன்றை இந்தவேளையில் மேற்கொண்டது என்பதற்கு அவர்களிடம் ஏதேனும் பதில்கள் இருக்கலாம் அல்லது வேறு ஒரு நாடு இவ்வாறான சந்திப்பை சுவிஸ் தூதரகத்தை முன்னிறுத்தி மேற்கொண்டிருக்கலாம் - விடயம் எதுவாக இருந்தாலும்கூட, இவ்வாறான சந்திப்புகளுக்காக சுவிற்சர்லாந்து நாட்டில் தங்கியிருந்த அரசியல் பிரமுகர்கள் குதூகலமாக நாட்களைக் கழித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஒருகாலத்தில் வெளிநாடுகளில் நடைபெறும் அரசியல்வாதிகளுக்கான அமர்வுகளின் அடிப்படையான நோக்கங்களில் ஒன்று அவர்களுக்கான ஓய்வுநிலை உல்லாசமாகவும் இருப்பதுண்டு.

இலங்கையின் சமஷ்டி கோரிக்கைக்கு 76 ஆண்டுகால வரலாறுண்டு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1957இல் பேச்சுக்கு சென்றபோதே, பண்டாரநாயக்கா மிகவும் அழுத்தம் திருத்தமாக சமஷ்டி கோரிக்கையை நிராகரித்து, வேண்டுமானால் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுவாருங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அன்றிலிருந்து இன்றுவரையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எந்தவொரு சிங்கள ஆட்சியாளரும் சமஷ்டியை மட்டுமல்ல, ஆகக்குறைந்த அரசியல் தீர்வுகளைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தநிலையில் மிதவாத அரசியல் பின்னர் ஆயுதப் போராட்டம் அதன் பின்னரான கடந்த பதினாறு வருடகால நீதிகோரும் அரசியல் என்றெல்லாம் காலம் கடந்தபோதிலும்கூட, ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு சிறிய மாறுதலையும் காண்பிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் இவ்வாறான சந்திப்புகள் என்ன விளைவை ஏற்படுத்திவிடும்?

அரசியல் தீர்வு விடயத்தில் உண்மையிலேயே சுவிஸ் வெளிவிவகார அமைச்சுக்கு நாட்டம் இருந்தால் அரசமைப்பில் இருக்கும் விடயங்களை அமுல்படுத்துவதிலிருந்து எவ்வாறு படிப்படியாக முன்னோக்கிப் பயணிக்கவேண்டும் என்பதையே அரசாங்கத்துக்கும் ஏனைய கட்சிகளுக்கும் வலியுறுத்தவேண்டும். அவ்வாறான உரையாடல் ஒன்றை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான உதவிகளை வழங்கவேண்டும். குறிப்பாக, மாகாண சபைகள் தேர்தலை நடத்தி, முதலில் வடக்கு, கிழக்கில் மாகாண சபைகளை வினைத்திறனுடன் நடத்துவதற்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க முன்வரவேண்டும். அவ்வாறில்லாது சமஷ்டி பற்றிப் பேசுவதானது, காலத்தை விரயம் செய்வதற்கு பயன்படுமே தவிர, நிலைமைகளில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

# தொழிற்சங்கங்களை அடக்க முயன்றால் விளைவுகள் பாரதூரமானதாக அமையும்

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை



கொழும்பு, செப். 25

தொழிற்சங்கத்தினரை பலவந்தமான அடக்க முயற்சித்தால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ளவேண்டும். 1889 மற்றும் 1988 ஆம் ஆண்டு காலங்களில் செயற்பட்டதை போன்று தற்போது செயற்பட முடியாது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ளது. இனியும் கடந்த கால அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிக்க முடியாது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினீர்கள். இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா, மக்கள் பயனடைந்துள்ளார்களா?

வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற கோஷத்துடன் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இன்று மக்கள் வளப்படுத்தப்படவில்லை. மாறாக 159 பேரும் கோடீஸ்வரர்களானமை இன்று பேசுபொருளாகியுள்ளது.

75 வருட சாபத்தினால் செல்வந்தர் ஆகமுடியாதோர் கடந்த வருடத்தில் செல்வந்தர்களாகியுள்ளனர்.

அதேநேரம், கடந்த ஒரு வருடத்தில் பொருளாதாரம் வீழ்ச்சி பாதையில் சென்றுள்ளது - என்றார். (அ)

# போதைப்பொருள் பாவனையை நாட்டில் முற்றாக ஒழிக்கவேண்டும்

## அமைச்சர் சரோஜினி போல்ராஜ்

கொழும்பு, செப். 25

நாட்டில் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜினி போல்ராஜ் நேற்று பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டார்.

தண்டனைச் சட்டக் கோவை திருத்தச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள அம்மாக்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உங்கள் பிள்ளைகளை நீண்ட கால போதைப்பொருள் வாடிக்கையாளர்களாக வைத்திருக்க திட்டமிடுகிறார்கள். நாளாந்தம் கண்டு பிடிக்கப்படும் போதைப் பொருள்களால் எமது பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், அவர்களுக்கான அந்த சிறந்த எதிர்காலத்தை எவ்வாறு கொடுக்கப்போகிறோம். தற்போது பாடசாலைகளுக்குள் போதைப்பொருள் பாவனை காணப்படுகிறது. அத்தோடு துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரிப்பு, நினைவாற்றல் இழப்பு, பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு, வயது குறைந்த கர்ப்பம் அதிகரிப்பு ஆகியனவும் இந்த போதைப் பொருள் பாவனையால் காணப்படுகிறது. எனவே இந்த சம்பவம் தொடர்பில் நாம் அனைவருக்கும் மிகப் பெரிய பொறுப்பொன்று உள்ளது. அரசியல் பேதங்களை மறந்து விசேடமாக அனைத்து பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளை போதைப்பொருளிலிருந்து பாதுகாக்கவேண்டும். நாட்டுக்குள் போதைப் பொருளை கொண்டுவந்து இளம் தலைமுறையினரின் வாழ்வைச் சீரழிக்கும் இந்த போதைப்பொருள் பாவனையை நாட்டுக்குள் இருந்து துடைத்தெறிய வேண்டியதன் பொறுப்பை நாம் ஒவ்வொருவருமாகவும் சமூகமாகவும் ஏற்க வேண்டும்-என்றார். (அ)

# கியூ.ஆர். முறையில் விவசாயிகளுக்கு உர மானியம்!



கொழும்பு, செப். 25

தேயிலை விவசாயிகளுக்கு உர மானியங்களை வழங்குவதற்கான கியூ. ஆர். குறியீடு முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உள் கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்த முயற்சிக்கு அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், முதல் கட்டம் செப்ரெம்பர் 26 ஆம் திகதி மத்துகமவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

2025 ஆம் ஆண்டுக்கான தேயிலை உர மானிய திட்டத்துக்காக தேயிலை சபை 2,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும், இதில், ரூ.200 மில்லியன் புதிய கியூ. ஆர். குறியீடு முறையின் கீழ் விநியோகிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



செப்ரெம்பர் - 25 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 09
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சவியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். அதிகாரிகளுக்கு உதவுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**மிதுனம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவர். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முன்னேறும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் அவசர முடிவுகளை தவிர்க்கவும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**விருட்சிகம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**தனுசு**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். சிறப்பான நாள்.

**மகரம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப் ஆகபோய் முடியும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

# பருத்தித்துறை மரக்கறிச் சந்தை விவகாரம் நகர சபை அமர்வில் கடும் வாத பிரதிவாதம்

யாழ்ப்பாணம், செப். 25

பருத்தித்துறை நகர சபையில் மரக்கறி சந்தை விவகாரம் மற்றும் நீதிமன்றப் பகுதி, மரக்கறிச் சந்தை வடிகால் அமைப்பது தொடர்பாக சபையில் நேற்று வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து நிதி தொடர்பாக கணக்காளரின் ஆலோசனையை பெறுவதற்காக சபை சில நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு கணக்காளருடன் பல்வேறு விடயங்கள் ஆலோசிக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஆரம்பமாகியது.

நகரசபைத் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு அமர்வு ஆரம்பமானது.

அமர்வில் மழை காலத்திற்கு முன்னர் வடிகால்கள் அமைத்தல், சீர்செய்தல், பொது இடங்களில் வெடி கொழுத்துவதை தடை செய்தல், வளர்ப்பு மற்றும் கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை செய்தல், கட்டாக்காலி நாய்களை பிடித்து கருத்தடை செய்வதற்கு 600 ரூபா நிதி வழங்குதல், பருத்தித்துறை நகர சபைக்கு சட்ட ஆலோசகர் ஒருவரை நியமித்தல், திண்ம கழிவ கற்றல் கட்டணம் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபைக்கு கோரிக்கை கடிதம் அனுப்புதல், வியாபார உரிமம் பெறாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், சபையால் வழங்கப்படும் விசேட அனுமதிகள் தொடர்பான தீர்மானங்கள் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், நகர சபையால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வீதி மற்றும் வடிகால் அமைப்பில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பாகவும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. (அ)

# மன்னார் நகரத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் மீது சட்ட நடவடிக்கை

மன்னார், செப். 25

மன்னார் நகரப் பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட உணவகம் ஒன்று சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய வந்த நிலையில் நேற்று முன் தினம் மன்னார் நகரசபை பொது சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் கண்காணிக்கப்பட்டு உணவகம் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த உணவகம் உரிய முறையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் அசுத்தமாக உணவுகள் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

குறித்த உணவகம் எந்த ஒரு வியாபர உரிமமும் இன்றி இயங்கி வந்ததுடன், உணவகத்தின் கழிவு நீர் உரிய விதமாக அகற்றப்படாமல் புழுக்கள், இலையான் உருவாகி இருந்ததுடன், ஆரோக்கியமற்ற விதமாக உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை, உணவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சிய படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த உணவகத்துக்கு எதிராகவும் உரிமையாளர் மீதும் பல்வேறு பிரிவுகளில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுப்பிட்டியில் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப். 25

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவசிறி பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் "திருவிளையாடல்" புராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் "ஈழத்துச் சமயப் பெரியார்கள்" குருபூஜை விழாவும் ஓர் அங்கமாக நவராத்திரி விழாத் தொடர் 03 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறி நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்குச் சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

விசேட பூசை வழிபாட்டினைத் தொடர்த்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச. நவநீதனின் "நவராத்திரி உணர்த்தும் வாழ்வியல்" என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவும் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக ஜானகி பதவியேற்பு

யாழ்ப்பாணம்,செப். 25

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக ஜானகி கிருஸ்ணபிள்ளை தனது கடமைகளை நேற்று காலை சுப வேளையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை சென் தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய அவர், நேற்று முதல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபராக தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (அ)

# பருத்தித்துறையில் திலீபனின் ஊர்திப்பவனி

யாழ்ப்பாணம், செப். 25

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு தினம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் "திலீபன் வழியில் வருகிறோம்" என்று ஊர்தி பவனியொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பவனி, நேற்று முன் தினம் பிற்பகல் 01:30 மணியளவில் பருத்தித்துறை நகர் பகுதியை அடைந்தது. தியாக தீபம் தீலீபனிம் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி கடந்த ஒரு வார காலமாக தமிழர் தாயக பகுதிகளில் அஞ்சலிக்காக சென்று வருகின்ற நிலையில் பருத்தித்துறை நகர் மக்களின் அஞ்சலிக்காக நேற்று முன்தினம் வருகை தந்தது.

இதன்போது பருத்தித்துறை நகர சபை தவிசாளர் வின்சன் டி போல் டக்ளஸ் போல் மற்றும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் தியாக தீபம் திலீபனின் திரு உருவ படத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.



இதன்போது பருத்தித்துறை நகரப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஊர்தியின் முன் பகுதியில் பெருந்தொகையான பட்டாசுகளை கொழுத்தியதால் நகர் முழுவதும் பரபரப்பான சூழல் நிலை காணப்பட்டது.

அதனை தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்து கொண்டு சென்றனர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிக் குற்றங்களை எதிர்ப்பதற்கு இந்தியாவின் தொழில்நுட்ப உதவி

## உயர்மட்டக் குழு இலங்கை வந்தது

கொழும்பு, செப். 25

**நிதி குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான கட்டமைப்புகளை வலுப்படுத்தல், நிதி மோசடியைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதை எதிர்கொள்வது உள்ளிட்ட திறன் மேம்பாட்டுக்கான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.**

நிதிச் செயற்பாட்டுக் குழு தலைமையிலான உயர்மட்ட இந்தியக் குழு, அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இதன்போது, குறித்த குழுவினர் இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய அமைச்சின் அதிகாரிகளை சந்தித்திருந்தனர்.

தொழில்நுட்ப உதவி, மூலோபாயக் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் அதன் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் இலங்கையின் முயற்சிகளை ஆதரிப்பதில் இந்தியா உறுதிப்பாட்டை கொண்டுள்ளதாக இந்திய நிதி அமைச்சு வெளியிடப்பட்டுள்ள எக்ஸ் தள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# திஸ்ஸ குட்டியாராச்சிக்கு பெரமுன கடும் எச்சரிக்கை!

கொழும்பு, செப். 25

பொதுக் கூட்டங்களில் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிட்டதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சிக்கு பொதுஜன பெரமுன டுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.

பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் திஸ்ஸ குட்டியாராச்சியின் அண்மைய அறிக்கைகள் தொடர்பாக இந்த எச்சரிக்கையை விடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும்போது இலங்கையின் "அதிகாரபூர்வமற்ற ஜனாதிபதியாக" திஸ்ஸ குட்டியாராச்சி பணியாற்றுவார் என்று கூறியதைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை வந்துள்ளது.

ஆதரவாளர்களிடம் உரையாற்றிய திஸ்ஸ குட்டியாராச்சி, ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராகத் தன்னைக் கருதுவதாகவும், 2029 இல் ஜனாதிபதிப் பதவியை வெல்வதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே ஒரு அரசியல் அலை உருவாகி வருவதாகவும் கூறியிருந்தார்.

(அ)

# ஹல்துமுல்லையில் நிலநடுக்கம்!

கொழும்பு, செப். 25

ஹல்துமுல்லை, வெலன்விட்ட, அக்கரசீய, லெமஸ்தொட்ட, முருதஹின்ன மற்றும் ஏனைய பகுதிகளில் நேற்று முன் தினம் மாலை 6.46 மற்றும் 6.47 மணிக்கு ஒரு சிறிய நிலநடுக்கம் உணரப்பட்டதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இது மிகவும் சிறிய அளவிலான நிலநடுக்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் இது பல்லேகல, ஹக்மன, மஹாகனதராவ மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள நிலநடுக்க உணரிகளால் பதிவு செய்யப்படவில்லை என்று பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார தெரிவித்தார்.

(அ)

# தங்காலை போதைப்பொருள் விவகாரம் காணி உரிமையாளரை கண்டறிய குழு!

கொழும்பு, செப். 25

தங்காலையில் அண்மையில் ஒரு தொகை போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளரை கண்டறிய விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தங்காலைப் பகுதியில் ஏற்பட்ட சந்தேகத்துக்கிடமான மரண சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, 705 கிலோ கிராம் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த போதைப்பொருள்கள் காணப்பட்ட காணிகளின் உரிமையாளரை கண்டறிய ஒரு விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ. வுட்லர் தெரிவித்தார்.

இதேவ ளை, தங்காலை சீனிமோதர பகுதியில் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் மர்மமான முறையில் இறந்த மூன்று பேரின் உடல்களின் பிரேத பரிசோதனையில், அவர்கள் ஹெரோயின் அதிகமாக உட்கொண்டதால் இறந்ததாக தெரியவந்துள்ளது.

அவர்களின் உடல்கள் தொடர்பான பிரேதப் பரிசோதனையில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

(அ)

# கொழும்பு மாநகர சபை ஊழியர்களுக்கு போதைப்பொருள் விநியோகித்தவர் கைது!

கொழும்பு, செப். 25

கொழும்பு மாநகர சபை ஊழியர்களுக்கு ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த அலுவலக உதவியாளர் ஒருவரை ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் அங்கு சாரதியாக கடமையாற்றும் நிலையில் நீண்ட காலமாக தனது அலுவலக அறையில் குறித்த போதைப்பொருட்களை கவனமாக பொதி செய்து நகராட்சி ஊழியர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வலான ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேக நபரிடமிருந்து 20 ஆயிரம் மில்லிகிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 38 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# தமிழரசு கட்சியின் எம்.பிகள் இந்தியத் தூதுவருடன் பேச்சு!

கொழும்பு, செப். 25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது சமகால அரசியல் பற்றிய விடயங்களுடன் மக்களுக்கான நீண்டகாலமாக இழுபறியில் உள்ள தீர்வு குறித்தும், மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்ப்டுள்ளது. (அ)

# அரசியல் பண்பாட்டை மாற்றுவதற்கு மக்களை ஒன்றிணைக்கவேண்டும்!

## நாட்டை மாற்றியமைக்கும் பிரஜைகள் அமைப்பு

கொழும்பு, செப். 25

நாட்டின் அரசியல் பண்பாட்டை மாற்ற மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என நாட்டை மாற்றியமைக்கும் பிரஜைகள் அமைப்பின் தலைவர் சந்திரசிறி விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் போதைப்பொருள் வலையமைப்பு நாட்டின் கதவுக்குள் நுழைந்துவிட்டதாக சிவில் செயற்பாட்டாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்கள் நாட்டின் குழந்தைகளையும் இளைஞர்களையும் அழித்து வருகின்றது.

தற்போது எம்முடைய நாடு உலகின் முன்னணி போதைப் பொருள் உற்பத்தி மற்றும் விநியோக மையமாக மாறியுள்ளது. தென் மாகாணத்தில் கூட பல உற்பத்தி இடங்கள் சட்டவிரோதமாக இயங்கி வருகின்றன

அரசியல் தலைவர்கள் தான் இந்தப் போதைப்பொருள் வணிகத்தையும் பாதாள உலகக் குழுக்களையும் உருவாக்கினர்.

இவை தற்போது நிரூபிக்கப்பட்டு வருவதால், ஊழலில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் அச்சமடைந்து ஒன்றிணைய ஆரம்பித்துள்ளனர்.

மக்களே இனி அமைதியாக இருக்கக்கூடாது. வாக்கு செலுத்திய பின் ஒதுங்காமல், நாட்டை காப்பாற்ற அரசியல் மாற்றத்தில் பங்கு கொள்ளவேண்டும்.

நாட்டின் சட்டம் முறையாக அமுல்படுத்தப்பட்டு, தவறுகளை செய்தவர்களை கைது செய்ய வேண்டும்.

அதன் ஊடாக மக்கள் போதைப்பொருளும் பாதாள உலகமும் இல்லாத சுதந்திரமான சூழலில் வாழ முடியும் என்றார்.

# போதைப்பொருள் வைத்திருந்த வெளிநாட்டு பயணி கைது!

கொழும்பு, செப். 25

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு "குஷ்" போதைப்பொருட்களை சட்ட விரோதமாக கொண்டுவந்த வெளிநாட்டு பயணி ஒருவர் நேற்று புதன்கிழமை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டார்.


கைது செய்யப்பட்டவர் இந்தியாவைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவர் தாய்லாந்தின் பாங்கொக்கில் "குஷ்" போதைப்பொருட்களை கொள்வனவு செய்து, அங்கிருந்து நேற்றுக் காலை 12.00 மணிக்கு இண்டிகோ விமானம் மூலம் இந்தியாவின் பெங்களூருக்கு வந்துள்ளார்.

சந்தேகநபரின் பயணப்பையிலிருந்து 03 பொதிகளில் மறைத்து வைக்கப்பட்ட 1 கோடியே 55 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா மதிப்புடைய 01 கிலோகிராம் 556 கிராம் "குஷ்" போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

(அ)

# ஜெய்சங்கருடன் நியூயோர்க்கில் அமைச்சர் விஜித ஹேரத் சந்திப்பு!



நியூயோர்க், செப். 25

அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தின்போது, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தினார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான நட்பையும் நெருக்கமான ஒத்துழைப்பையும் மீண்டும் உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு குறித்து எக்ஸில் பதிவிட்டுள்ள அமைச்சர் விஜித் ஹேரத், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்துக்கு இடையே, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான நட்பு மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்த இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், இலங்கை வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முறக்கொட்டாஞ்சேனை படை முகாம் 30 ஆண்டுகளுக்கு பின்னர் அகல்கிறது!

## 30 ஆம் திகதி கையளிப்பு என்கிறார் சிறிநேசன் எம்.பி.

மட்டக்களப்பு, செப். 25

35 ஆண்டுகளின் பின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முறக்கொட்டான்சேனை படை முகாம் முற்றாக அகல்கிறது. எதிர்வரும் 30 ஆம் திகதி கையளிப்பு இடம்பெறலாம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞான முத்து சிறிநேசன் தெரிவித்தார்.

முறக்கொட்டாஞ்சேனை படை முகாம் மூடுதல் தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





அவர் மேலும் தெரிவிக்கையில்-

படையினர்,1990 ஆம் ஆண்டில் இருந்து முறக்கொட்டான்சேனை பாடசாலையில் முகாமை அமைத்து இயங்கி வந்தனர்.

அந்த முகாம் பல தமிழர்களின் கண்ணீர்க் கதைகளுக்கு காரணமாக இருந்தது.

2017 காலப்பகுதியில் மக்களின் கோரிக்கைகளை அப்போதைய மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனுக்குக் கொண்டு சென்றேன்.

அதற்கமைய இராணுவ முகாமை அகற்றி பாடசாலையை விடுவிப்பதுடன், அங்குள்ள காணிகளில் மக்களுக்கான வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கணிசமான காணிகளை மீட்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த கணிசமாக காணிகள் மீட்கப்பட்டன. ஆனால், 12 இராணுவத்தினர் வரை பாடசாலையில் இருந்தனர். எனினும் தமக்குரிய காணிகளை வழங்குமாறு மக்கள் சார்பாக நாம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரினோம்.

இருந்தாலும் அந்த இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொண்டு இருந்தனர். இது பற்றி நாம் பல தடவைகள் உரிய அமைச்சர்கள், ஜனாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தோம்.

இந்நிலையில் மீதி இராணுவத்தினர் முழுமையாக வெளியேறி உன்னிச்சை இராணுவ முகாமுக்குச் செல்வதாகத் தகவல் கூறுகிறது.

மக்களின் போராட்டம் எமது முயற்சிகள் அழுத்தங்கள் மூலமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போதும் இவ்விடயம் கூறப்பட்டது.

இதே போல் தாண்டியடி அதிரடிப் படைமுகாம், குருக்கள் மடம் இராணுவ முகாம், வவுணதீவுப் பொலிஸ் நிலையம் போன்றவை துயிலும் இல்லம், பாடசாலை நிலம், பிரதேச சபை வளாகம் என்பவற்றில் இயங்கி வருகின்றன. அவையும் அகற்றப்பட வேண்டியவையாக உள்ளன.

இவற்றில் இருந்தும் படையினர் வெளியேறவேண்டும் என் எமது அழுத்தமான கோரிக்கையாகும்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளாகியும் யுத்தமில்லாத மண்ணில் படையினரின் இருப்பு என்பது தமிழ்மண் ஆக்கிரமிப்பாகவே அமைகின்றது.

காலம் கடந்தாவது படைமுகாம் விலக்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதற்காகவும், எதிர்காலத்திலும் முகாம்களை விடுவிப்புச் செய்வதற்காகவும் நன்றிகளைக் கூறுகின்றோம். ஆனால், அம்முகாமில் வதைக்கப்பட்ட கொல்லப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்-என்றார். (அ)

# காத்தான்குடியில் முதலாவது திண்ம கழிவு மீட்பு நிலையம்

மட்டக்களப்பு, செப். 25

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் முதலாவது திண்மக் கழிவு மீட்பு நிலையம் காத்தான்குடியில் நிறுவப்பட்டுள்ளது.

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்திற்கு இணங்க, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் செயல்படுத்தப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களில் திண்மக் கழிவுகளை மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்று வசதிகளை வழங்குவதற்காக கழிவு மீட்பு மையங்களைத் தொடங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் கழிவு மீட்பு மையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன் முதல் நிகழ்ச்சித் திட்டமாக 50.8 மில்லியன் ரூபா செலவில் காத்தான்குடி நகர சபையில் கழிவு மீட்பு மையத்தின் பணிகள் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

உக்காத குப்பைகள் உருவாகும் தலா 06 இடங்களில் மொத்தம் 54 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த இடங்களில் 25 இல் சாத்தியக் கூறு ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த 03 ஆண்டுகளுக்குள் சுகாதாரக் குப்பைக் கிடங்குகளில் சேரும் கழிவுகளின் அளவை 30 வீதம் குறைக்க சமூக விழிப்புணர்வு மற்றும் சமூக பங்கேற்பு மூலம் 3 ஆர் எண்ணக்கருவை செயல்படுத்துதல், உருவாக்கப்படும் கழிவுகளின் அளவைக் குறைத்தல் மற்றும் முறையாகப் பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்ட இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளீன் சிறிலங்கா செயலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ், பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் உட்பட ஏராளமானோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றதுடன், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர சபைகள், பிரதேச சபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட பிரதேச அரசியல் பிரதிநிதிகளும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். (அ)

# எதிரணிகள் ஒன்றிணைவது நல்லது!

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

கொழும்பு, செப். 25

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் ஓரணியில் திரண்டாதல் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

"எதிரணிகள் ஒன்றிணைவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டால் நிச்சயம் அதனை செய்ய வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கப்படும்.

தவறிழைக்கப்பட்டால் நிச்சயம் அவற்றை எதிர்ப்போம். மக்கள் வாக்களிக்கும்வரை அரசியலில் ஈடுபடும் எண்ணத்துடன்தான் இருக்கின்றேன்." - எனவும் இராதாகிருஷ்ணன் கூறினார். (அ)

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு நிகழ்வு

அம்பாறை, செப். 25

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுக்காலை கல்முனை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வு கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் வழிகாட்டலில் கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக பிரிவு வளவாளரான பொலிஸ் சார்ஜன்ட் முகம்மட் பாரீஸ் கருத்துக்களை வழங்கினார். சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது, சமூக ஊக்குவிப்பு, சிறுவர்களின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய சமூகம் ஒன்றிணைந்து செயல்படுவது, சிறுவர்களின் உரிமைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும், பிள்ளைகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவது, பெற்றோர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரினதும் கடமையாகும் என விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி திருமதி எஸ்.பி.என்.எம். சுவர்ணகாந்தி, கல்முனை பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட் ஏ.ஆதம் பாவா மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள்எனப்பலர்கலந்து கொண்டனர்.

# கல்முனைப் பிரதேச செயலகத்தை டிஜிற்றல் மயமாக்க இரு செயலிகள்!

அம்பாறை, செப். 25

கல்முனைப் பிரதேச செயலகத்தினை டிஜிற்றல் மயமாக்கும் பொருட்டு பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பாவனைக்கான இரு செயலிகளை அறிமுகம் செய்து ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் டி.எம்.எம் அன்சார் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டு பொதுமக்களுக்கான இலத்திரனியல் சேவை வழங்கும் செயலியினைத் திறந்து வைத்தார்.

இச்சேவை மூலம் பொதுமக்கள் தமக்கு வழங்கப்படுகின்ற, வழங்கப்பட்டுள்ள சேவைகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளுதல், பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களை சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்குதல், மேலும் வீட்டில் இருந்தவாறே ஒரு சில சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பயன்களைப் பெற்றுக் கொள்வதோடு உத்தியோகத்தர்களுக்கான லீவு, அவர்கள் வேலை செய்யும் திறனை பரிசோதிக்கும் வகையிலான மேற்பார்வை வசதி என்பனவற்றைக் கொண்ட இரு செயலிகள் பாவனைக்காக வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகம் முன்னோடியாக திகழவேண்டும் என்ற பிரதேச செயலாளரின் எண்ணக்கருவில் உருவான இத்திட்டம் எதிர்வரும் ஒரு மாதத்திற்கு பரிசோதனை பயன்பாட்டுக்காக விடப்பட்டு மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கான தொழிநுட்ப உதவிகளை வழங்கிய கல்முனை பிரதேச செயலகத்தின் உதவி கணினி உத்தியோகத்தர் எஸ்.எல். பர்ஹானா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே.ஏ. ஆஹறாஸ் குழுவினர் மேற்கொண்டனர். (அ)

# சாய்ந்தமருது உணவகங்களில் திடீர் சுகாதாரப் பரிசோதனை!

அம்பாறை, செப். 25

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் செயல்படும் சுகாதார பரிசோதகர்கள் சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள உணவகங்களில் திடீர் சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். பரிசோதனையின் போது பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

சுகாதார நெறிமுறைகள் பின்பற்றாமல் தயாரிக்கப்பட்ட உணவுகள், தரமற்ற மற்றும் மனித நலனுக்கு தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்கள், உணவு தயாரிப்பு மற்றும் சேமிப்பு பகுதிகளில் காணப்பட்ட சுகாதாரமின்மை இதன்போது கண்டறியப்பட்டது.

இக்குறைபாடுகளைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட உண வக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. (அ)

# திருகோணமலையில் மீனவர் ஆர்ப்பாட்டம்

திருமலை, செப். 25

திருகோணமலையில் மீனவர்களின் பிரச்னைகளை தீர்க்கக் கோரிய கவனயீர்ப்பு போராட்டம் நேற்று இடம் பெற்றது.

திருகோணமலை உட் துறைமுக வீதியில் உள்ள கடத்தொழில் நீர்வளத் திணைக்கள அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் திருகோணமலை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், குறிப்பாக தடை செய்யப்பட்ட வலை பாவிப்பது, பிடிக்கும் மீன்களை அடாவடியாக சிலர் வந்து பறிப்பது மற்றும் மீன்கள் களவு போவது சம்பந்தமாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்க...

யோர்க் நகரில் சந்திப்பு இடம்பெற்றது.

தென்னாபிரிக்க ஜனாதிபதியினால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமோகமாக வரவேற்பளிக்கப்பட்டது.

தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு கலந்துரையாடல் ஆரம்பமானதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

## தயாசிறியின்...

பணிகளுக்கு அமர்த்த முடியாது.

நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை பாதுகாப்பதற்கு இத்தகைய விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும், ஓய்வுபெற்ற நீதியரசர் அல்லது நீதிபதியொருவரை அரச பதவிகளுக்கு நியமிக்கும்போது, நீதித்துறை சேவையின் சுயாதீனத் தன்மை குறித்து கேள்விகள் எழுகின்றன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் தற்போது, ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தர விதிவிடப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். எவ்வாறாயினும், அவரது நியமன கடிதம் குறித்து தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கேள்வி எழுப்பிய போது, அவ்வாறான எந்த கடிதமும் இல்லை என பதிலளிக்கப்பட்டது.

முன்னதாக சுயாதீனமாக இருந்த நீதிச் சேவை அதிகாரிகள் சங்கம், காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னர் இந்த அரசாங்கத்தின் அரசியல் கட்சியுடன் இணைந்தது. தற்போது, இந்த சங்கத்தின் முன்னாள் தலைவர் வடமத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது, பல நீதிபதிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுகின்றனர். அவ்வாறே மிகவும் சிரேஷ்ட நீதிவானாக இருந்த சதுரிக்கா டி சில்வா கல்கிசை நீதிவானாக நியமிக்கப்பட்டு ஓராண்டு கூட பூர்த்தியாகாத நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க உள்ளிட்டோரை கைது செய்யுமாறு உத்தரவிட்ட பின்னணயில் அவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என தயாசிறி குறிப்பிட்டார்.

எனவே, பிரதம நீதியரசர் இந்த விடயத்தில் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

இதனையடுத்து குறுக் கிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் பிரதம நீதியரசர், ஆயங்களை நியமிப்பதாகவும், அரசாங்கத்தின் பங்காளராக செயற்படுகிறார் என தெரிவித்தமை பாரதூரமான குற்றச்சாட்டு எனவும், அதனை அவர் பொறுப்புடன் கூறினாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த தயாசிறி ஜயசேகர, தாம் பிரதம நீதியரசர் மீது எந்த குற்றசாட்டையும் சுமத்தவில்லை. எனினும், குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தமது உரையை முழுமையாக செவிமடுக்கவில்லை எனவும் குற்றம் சுமத்தினார்.

இதனிடையே, கருத்து தெரிவித்த, பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க, தம்மிடமும் வசந்த சமரசிங்க மற்றும் நகரசபை தலைவர் ரஞ்சன் ஜயலால் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும், அதற்கமைய உரிய திகதியில் வாக்குமூலம் வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், தம்மிடம் சரியான ஆவணங்கள் உள்ளதாகவும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை அதனை சபையில் முன்வைப்பதாகவும், எவரும் குழப்பமடைய வேண்டாம் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அதன்பின்னர் கருத்து தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

வசந்த சமரசிங்க உள்ளிட்டோரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என குறிப்பிட்டார்.

இதன்போது. மீண்டும் குறுக்கிட்ட தயாசிறி ஜயசேகர நிச்சயமாக, ஆவணங்களை தாம் வெள்ளிக்கிழமை சபையில் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். (அ)

## ஐ. நா. மனித...

ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் ஜனாதிபதியை வரவேற்றதுடன் கடந்த வருடத்தில் மனித உரிமை தொடர்பில் இலங்கை எட்டியுள்ள முன்னேற்றம் தொடர்பான விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதியும் முன்னாள் பிரதம நீதியரசருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜெயசூரியவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## அமெரிக்காவுட...

செலுத்தப்பட்டதோடு அந்தத் துறைகளை மேலும் முன்னேற்றுவது குறித்தும் ஆராயப்பட்டது.

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு பலமான மக்கள் ஆணை யுடனான புதிய அரசாங்கம் என்ற வகையில், பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்ட ஒரு வளமான பொருளாதார முன்னுரிமை அடிப்படையில் அமெரிக்காவுடன் ஒரு செயற்பாட்டுடனான மற்றும் மிக நெருக்கமான உறவைப் பேண எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் உட்பட, மக்களின் எதிர்காலத்திற்காகப் பொருளாதாரத்தின் நீண்டகால ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்குத் தேவையான மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக சமமின்மையை நிவர்த்தி செய்தல், இருதரப்பு வர்த்தகத்திற்கான தடைகளைக் குறைத்தல், நியாயமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வர்த்தக உறவுகளை உறுதி செய்வதற்காக ஓர் உடன்பாட்டை எட்டுதல் மற்றும் இலங்கை பிரதிநிதிகளுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுகளின் முன்னேற்றம் தொடர்பில் இதன் போது இரு தரப்பினரும் மீளாய்வு செய்தனர்.

## மாணவர்களுக்கு...

பாராளுமன்றத்தில் பேசிய அமைச்சர், மாணவர்கள் திரைப்படங்கள் மற்றும் நாடகங்களைப் பார்ப்பதற்கும், நல்ல இசையைக் கேட்பதற்கும், கடற்கரைகளைப் பார்வையிடுவதற்கும், கலாசார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் இந்த ஒதுக்கீடு கலாசார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

## சிறுவர்...

தண்டனைச் சட்டத் திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு, வீடுகள், பாடசாலைகள், தடுப்பு மையங்கள் மற்றும் வீதிகள் போன்ற இடங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் கிடைக்கபெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகம் என அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். இதன்படி, கடந்த ஆண்டு 1,350 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் 1,126 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

## ட்ரம்பை...

பொதுச் சபை அமர்வின் போது இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, உத்தியோகபூர்வ விஜயமாக அமெரிக்காவுக்கு சென்றுள்ளார். இந்நிலையில் அவர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் கலந்து கொண்டுள்ளார். (அ)

## காணாமலாக்க...

மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நிறைவேற்று...

சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரும்பான்மை அதிகாரத்தைக் கொண்ட அரசாங்கத்தின் கீழ் இந்நிறுவன கட்டமைப்புகளின் சுதந்திரம் தடைபடுவது இயல்பானதோடு, இந்த அரசாங்கத்தின் கீழும் இதில் மாற்றத்தைக் கண்டுகொள்ள வாய்ப்பில்லை என்றே புலப்படுகின்றது.

அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்த பிரகாரம், அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்று அவர்கள் கூறினாலும், இன்னும் அப்படிப்பட்ட ஒரு விடயத்திற்கு எந்தத் தயார் நிலையும் இல்லை என்றே தெரிகிறது - என்றார்.

## மல்லாகம்...

விசாரணையின் பின்னர் குறித்த நீதிவான், நீதிவான் ஒருவருக்குரிய கண்ணியமான நடத்தையை வெளிப்படுத்தியிருக்காத குற்றச்சாட்டுக்கு ஏதுவான சான்றுகள் முற்படுத்தப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து அவர் தனது பதவி விலகல் கடிதத்தினை உடனடியாக நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கையளித்ததன் அடிப்படையில் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் 23.09.2025 இலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

மேலும், நேற்று நீதிச்சேவை ஆணைக்குழுவின் சார்பில் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்துக்கு காலை வேளை பிரசன்னமாகி பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதவானின் சமாதான அறை மற்றும் அதில் உள்ள பொருட்களை பொறுப்பேற்று நீதிமன்ற பதிவாளரிடம் கையளித்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிய மேல் நீதிமன்ற நீதிபதி, புதிய நீதவான் ஒருவர் வெகுவிரைவில் நியமிக்கப்படுவார் என சட்டத்தரணிகளுக்கு உத்தரவாதம் வழங்கியிருந்தார் - என குறிப்பிட்டார். (அ-05)

## மார்பக...

உரையாற்றிய தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் இயக்குநர் சிறீனி அழகப்பெரும இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் 19,457 பெண் புற்றுநோய் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 5,477 பேர் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது வெற்றிகரமான சிகிச்சைக்கு வழிவகுக்கும் என்றபோதிலும், சுமார் 30வீதமான நோய்கள் தாமதமாகவே கண்டறியப்படுகின்றன.

இதனால் சிகிச்சை மிகவும் கடினமாகிறது என்று மருத்துவர் சிறீனி அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் ஆண்டுதோறும் 15,245 புற்றுநோய் தொடர்பான இறப்புகள் ஏற்படுகின்றன. இவற்றில் 798 இறப்புகள் மார்பகப் புற்றுநோயால் ஏற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மன்னார் காற்...

ஈடுபடும் மக்கள் தியாகம் செய்யவும் தயங்கமாட்டார்கள் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது-

மன்னாரின் காற்றாலை மின்சாரம் தொடர்பில் மன்னாரிலும் கொழும்பிலும் தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். ஆனால் ஜனாதிபதி தனது கடிதத்தில் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உபகரண செயற்பாடுகளை முன்னெடுக்க ஆணையை வழங்கியுள்ளார்.

உண்மையில் மன்னார் மக்களின் போராட்டம் பொய்திருக்கின்றதா? அந்த மக்களின் வாழ்வு உரிமை மறுக்கப்பட்டுள்ளதா? மன்னார் மக்களின் வாழ்வுரிமை பொய்யாக்கப்பட்டுள்ளதா? என்பதை இந்த சபையில் கேள்வியெழுப்புகின்றேன்.

மன்னார் நகர் தொடர்பான பல விடயங்களை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினாலும் அதனை கருத்தில் கொள்ளாமல் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று இலகுவாக கூறியுள்ளார். எவ்வாறாயினும் எங்களின் போராட்டம் தொடரும். அது இன்னும் வலுவடையும். மக்கள் வெள்ளமாக மாறும். மக்களின் உயிரை காவு கொள்ளும் இந்த மின்சார உற்பத்திக்கு எதிராக நாங்கள் இறந்தாலும் அடுத்த சந்ததி காப்பாற்றப்பட வேண்டும் என்று அகிம்சை வழியில் போராடும் மக்கள் இந்த போராட்டம் பொய்யாக்கூடாது என்பதற்கு பல தியாகங்களை செய்ய தயாராக இருக்கின்றனர் என்பதனை இந்த சபையில் கூறிக் கொள்கின்றேன் -என்றார். (அ)

## மன்னார் காற்றாலை திட்டத்தை தொடர்ந்து...

விபரங்களைத் தாம் பகிரங்கப்படுத்த முடியும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன்படி, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 36 காற்றாடிகளுக்கு மேலதிகமாக, ஆரம்பிக்கப்பட்ட இரண்டு திட்டங்களுக்கான 14 காற்றாடிகளை அமைக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதியின் பணிப்புரையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த காற்றாலை நிறுவல் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரில் தொடர்ந்தும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாலும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டங்களின் பின்னர் நிலைமையை அறிந்து பரிந்துரைக்கும் வகையில் நிபுணர் குழுவொன்றை ஜனாதிபதி அமைத்திருந்தார்.

அந்த குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலேயே, ஜனாதிபதி பணிப்புரையும் வெளியாகியுள்ளது.

அதேநேரம், இந்த பணிப்புரைக்கு மேலதிகமாக, நிபுணர் குழு பரிந்துரைத்துள்ள சுற்றாடல் சம்பந்தமான தடுப்பு நடவடிக்கைகளையும் உரிய முறையில் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட் டுள்ளதாக அரசாங்க அதிபர் கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மகப்பேற்று, பெண்நோயியல் மையத்தை முழு வீச்சில் இயக்குவதற்கு நடவடிக்கை!

**கிளிநொச்சியில் வடக்கு மாகாண ஆளுநர்**



யாழ்ப்பாணம், செப். 25

**நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் பராமரிப்பு சிறப்பு மையம் தொடர்பில் தேவையற்ற வதந்திகள் பரப்படுகின்றன. இந்த மருத்துவமனையை முழு வீச்சில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக இன்றைய நிகழ்வு அமைந்துள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேத நாயகன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் பராமரிப்பு சிறப்பு மையத்தின் பெண்நோயியல் விடுதியின் சேவைக்கான பகுதி ஆளுநரால் நேற்று புதன்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில், இந்த மருத்துவமனையை முழுமையாக இயக்குவதுதான் எங்கள் நோக்கம். அதற்குரிய ஆளணிக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதேநேரம் இந்த மருத்துவமனையை தற்போது இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்த கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை நிர்வாகத்துக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இதனை தொடர்ந்து இயக்குவதற்கான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தனது உரையில், இந்த நிகழ்வு மகிழ்ச்சியான தருணம். இந்த மருத்துவமனைக்கான ஆளணியை அங்கீகரிக்குமாறு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடம் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றோம். அவர்களை இங்கு வந்து நேரடியாகப் பார்வையிடுமாறும் கேட்டுள்ளோம். விரைவில் சாதகமான நடவடிக்கைகள் இடம்பெறும் என நம்புகின்றேன் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை அத்தியட்சகர் பிரபாத், மருத்துவர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், நோயாளர் நலன்புரி சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## வெளிநாடு செல்கிறார் ரணில்?



கொழும்பு, செப். 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உடல்நிலை காரணமாக வெளிநாடு செல்ல தயாராகி வருகிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ், இங்கிலாந்து அல்லது இந்தியா போன்ற நாடுகளில் ஒரு நாட்டுக்கு செல்ல தயாராகி வருவதாக தெரி விக்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எதிர்க்கட்சியின் பொறுப்பை ஏற்று எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளிடமிருந்து முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்புகள் வந்தன.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளார். மேலும் ஆயிரம் அரசியல் கூட்டங்களை நடத்தும் திட்டம் குறித்தும் முன்னாள் ஜனாதிபதி தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அவரது உடல்நிலை மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்லத் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இதுவரை குறிப்பிட்ட திகதிகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை எனவும், இந்த ஆண்டு இறுதிக்குள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்வார் என்றும் தெரியவருகிறது. (அ)

# மன்னார், முல்லை வைத்தியசாலைகளில் பாதைகளில் படுத்திருக்கும் நோயாளிகள்!

**சபையில் சுட்டிக்காட்டினார் ரவிகரன் எம்.பி.**

கொழும்பு, செப். 25

"மன்னார் மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் கட்டில்கள் நிரம்பி வழியோரப் பாதைகளில் படுக்கும் அவலநிலையே இங்குள்ளது. இது அரசின் ஓர வஞ்ச செயற்பாடாகும். இந்த நிலை மாறி எங்கள் மாவட்டத்துக்கு முன்னுரிமை வழங்குவீர்களா?"

-இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வியெழுப்பியுள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாய்மொழி மீதான கேள்வியின்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

இங்குள்ள நோயாளர் விடுதிகள் கட்டில்கள் இல்லாமல் நிரம்பிக் காணப்படுகின்றன. நோயாளர்கள் வழியோரங்களில் நிலத்தில் பாய் போட்டு இருக்கும் அவலநிலையே காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றமடையுமா?-என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், குறித்த வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை வழங்குவோம். விடுதியை சீரமைப்பதற்காக இலங்கையை விட இந்திய அரசும் உதவி செய்யவுள்ளது. ஆகவே இதற்கான பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். (அ)

## மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கு நவ.17 இல் விசாரணை!

கொழும்பு, செப். 25

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அமைச்சராக செயற்பட்ட காலத்தில் சட்ட விரோதமாக சொத்துக்களை ஈட்டியதாகக் கூறி, அவருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கின் விசாரணைக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

அதன்படி, இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கின் விசாரணைக்கு திகதி நிர்ணயிக்குமாறு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்தைக் கோரியது.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, வழக்கை நவம்பர் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானித்தார். (அ)

## இலங்கையின் ஏற்றுமதி 6.61 வீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 25

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதித்துறை தொடர்ந்து மீள்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியைக் காட்டியது. அதன்படி, குறிப்பிட்ட காலப் பகுதியில் மொத்த வருவாய் 11,554.32 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இது 6.61 வீத வலுவான அதிகரிப்பை பிரதிபலிக்கிறது என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

2025 ஓகஸ்ட் மாதம் மாத்திரம் மொத்த வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய மொத்த ஏற்றுமதிகள் 1,607.58 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது.

இது 2024 ஓகஸ்ட் மாதத்தை விட ஆண்டுக்கு ஆண்டு 2.57 வீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

இந்த செயல்திறன் இலங்கையின் ஏற்றுமதித் துறையின் வலிமையையும், சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கும் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்தப்பட்ட உத்திகளின் செயல்திறனையும் எடுத்துக்காட்டுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரசாங்கம் உரிய தீர்வை எமக்கு வழங்கவேண்டும்!

கொழும்பு, செப். 25

அரசாங்கம் 24 பரிந்துரைகள் தொடர்பில் கலந்துரையாடி உரிய தீர்வை வழங்க வேண்டும் என இலங்கை மின்சார சபையின் தேசிய ஊழியர் சங்க செயலாளர் அஜித் பிரியன் தெரிவித்துள்ளார்,

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபை தனியார்மயப்படுத்தப்படுவதால் ஊழியர்களுக்கு அநீதி இடம்பெறுகின்றுது. இது குறித்து அனைத்து தொழில்முறை சங்கங்களும் ஒன்று கூடி அடுத்தடுத்த நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்கவுள்ளோம்.

அரசாங்கம் மின்சார சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து, ஊழியர்களின் விடுமுறைகளை ரத்து செய்துள்ளது.

எங்களை அரசியல் குறிக்கோளுக்கு பயன்படுத்துவதாக பரப்பப்படுவது பொய்யான தகவலாகும். நாங்கள் அரசியல் இலாபம் நாடுவோர் அல்லர், நிறுவனத்துக்கும் பணியாளர்களுக்கும் ஏற்படும் அநீதியை மாத்திரே நாம் எதிர்க்கின்றோம்.

ஊழியர்களின் வேலைவாய்ப்பு பாதுகாப்பு, ஓய்வூதிய நிதி மற்றும் குடும்ப நலன்கள் குறித்து பெரிய சந்தேகங்கள் உள்ளன.

தனியார்மயமாக்கலால் எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் அபாயம் உண்டு. இது மக்களுக்கே பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

அரசாங்கம் ஊழியர்களுடன் உரையாடி 24 பரிந்துரைகளைப் பற்றிய கலந்துரையாடலை நடத்தி, உடன்பாட்டின் மூலம் பிரச்னையை தீர்க்க வேண்டும். இல்லையெனில், தொழிற்சங்கங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்லும் நிலை ஏற்படும்-என்றார். (அ)

## இலங்கை முதலிடத்தில்!

கொழும்பு, செப். 25

உலகளாவிய பயண சஞ்சிகையான "ரைம் அவுட்" இவ்வாண்டு ஒக்ரோபரில் பயணிக்க வேண்டிய நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதற்கமைய குறித்த பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை ஒரு சிறந்த இடமாக இருப்பதால், அதன் இதமான வெப்பமண்டல காலநிலை, கலாசார பாரம்பரியம் மற்றும் இயற்கையான அழகு ஆகியவற்றை குறிப்பிட்டு இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. கடற்கரைகள் மற்றும் மலைநாட்டுப் பயணங்கள் முதல் புராதன இடிபாடுகள் மற்றும் வனவிலங்கு சவாரிகள் வரை, இலங்கை பார்வையாளர்களுக்கு அனைத்தையும் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இலங்கைக்கு அடுத்தபடியாக, இலையுதிர் கால நிறங்கள் மற்றும் பருவகால திருவிழாக்களுக்காக துருக்கி மற்றும் மெக்சிக்கோ இடம்பெற்றுள்ளன. ஸ்பெயினில் உள்ள வலென்சியா, நியூயோர்க் நகரம், பிலிப்பைன்ஸ், பூட்டான், பொஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, ருமேனியாவில் உள்ள டிமிசோரா, சான் பிரான்சிஸ்கோ மற்றும் நமீபியா ஆகியவை இடம்பெற்றிருந்த மற்ற இடங்களாகும்.

வெளியிடப்பட்டுள்ள பட்டியலுக்கமைய இந்த இடங்கள் அவற்றின் பருவகால கவர்ச்சி, கலாசார நிகழ்வுகள் மற்றும் ஒக்டோபரில் சிறப்பாக அனுபவிக்கக்கூடிய தனித்துவமான பயண அனுபவங்கள் ஆகியவற்றுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.